பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 09 புதன்கிழமை (21.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 88

## ஓமந்தையில் குண்டுவீச்சு!

### பயிற்சி முகாமே இலக்கு - இராணுவம்
### பொதுமக்கள் இருவர் பலி - புலிகள்

வவுனியா, பெப். 21

வவுனியா - ஓமந்தையில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - அரச விமானப் படையின் 'கிபிர்' ஜெற் விமானங்கள் நேற்றுக்காலை குண்டுத் தாக்குதல் நடத்தியிருக்கின்றன. விடுதலைப் புலிகளின் இராணுவப் பயிற்சி முகாம் மற்றும் பீரங்கி நிலை என்று அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீதே குண்டுவீச்சு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்திருக்கிறார். இதனை மறுத்திருக்கும் புலிகள் தாக்குதல் நடத்தப்பட்ட இடம் ஒரு சிவிலியன் இலக்கு என்றும், உயிரிழந்த இரு பொதுமக்களின் சடலங்கள் அவ்விடத்தில் இருந்து மீட்கப்பட்டிருக்கின்றன என்றும் அறிவித்திருக்கின்றனர்.

வவுனியா நகரில் இருந்து வடகிழக்கே - சுமார் 16 கிலோ மீற்றர் தொலைவில் - உள்ள பரசங்குளம் என்னும் கிராமத்தின் மீதே காலை 7.30மணியளவில் இந்த விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இத்தாக்குதல் தொடர்பாக கொழும்பில்

(04 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். இந்து, வேம்படி மகளிர் கல்லூரிகளிலிருந்து அதிக மாணவர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில், யாழ். இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய இரண்டு பாடசாலைகளில் இருந்தும் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்றுள்ளனர் என்று முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(04 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மக்களை மனித கேடயமாக்கி
# துருப்புகள், ஆயுதங்கள் நகர்த்தல்

## ஏ-9 பாதையை மூடிவிட்டு கப்பல் மூலம் அரசு மேற்கொள்வதாக கூட்டமைப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்ரவரி 21

யாழ். குடாநாட்டுக்கான ஒரேயொரு தரைவழிப்பாதையை அரசு நீண்டகாலமாக மூடிவைத்துக் கொண்டு, அங்குள்ள மக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்தித் துருப்புகளையும், ஆயுதத் தளபாடங்களையும் கடல்வழியாக நகர்த்தி வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகக் கையொப்பம் இட்டு விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பலில் அரசுப் படைகளும், ஆயுத உபகரணங்களும் நகர்த்தப்படுவதை சர்வதேச சமூகம் தலையிட்டுத் தடுக்க வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக் கோரியிருக்கின்றது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செ. கஜேந்திரன், கி. சிவநேசன், ம. கா.ஈழவேந்தன், பத்மினி சிதம்பரநாதன், ம.க. சிவாஜிலிங்கம், க.பத்மநாதன், ச.சந்திரநேரு, க.துரைரட்ணசிங்கம், க. தங்கேஸ்வரி, சிவநாதன் கிஷோர், ந. ஸ்ரீகாந்தா, மாவை சேனாதிராஜா, ப. அரியநேத்திரன் ஆகியோர் ஒப்பமிட்டு விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 11 தொடக்கம் யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப் பாதை மூடப்பட்டுள்ளது. இதன் காரணமாக யாழ். குடாநாட்டிற்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடையிலான தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால் குடாநாட்டின் வர்த்தக நடவடிக்கைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மாணவர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், நோயாளர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள் என எவரும் தமது எந்தவொரு அவசர தேவைக்கும் கொழும்புக்கோ ஏனைய பகுதிகளுக்கோ செல்ல முடியாதவாறு அடைத்து

(04 ஆம் பக்கம் பார்க்க)

### தும்பளையில் நேற்று கடற்றொழிலாளி சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், பெப்.21

தும்பளைப் பகுதியில் நேற்றுமுற்பகல் 10 மணியளவில் கடற்றொழிலாளி ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த யாக்கோப்பு இருதயஜெனிராஜ் (வயது 32) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் மரண விசாரணைகளை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி அவர் உத்தரவிட்டார்.

(அ-1)

## பல்கலை. மாணவர்கள் நேற்றும் பகிஷ்கரிப்பு; துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ். பல்கலைக்கழக பொருளியல் சிறப்புக்கலை இறுதிவருட மாணவன் கிருஷ்ணர் கமலதாஸின் படுகொலையைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டாவது நாளாக நேற்றும் துக்கம் அனுஷ்டித்து கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணித்தனர்.

பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவிருந்ததும் அதற்கு முதல் நாள் மாணவன் கமலதாஸ் படுகொலை செய்யப்பட்டதால், பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்தமையும் தெரிந்தவையே.

மாணவர்கள் நேற்றும் தமது பகிஷ்கரிப்புப்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் புலிகளின் பகுதியில் இரு கிளைமோர் தாக்குதல்கள்

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நேற்றுக்காலை இரண்டு கிளைமோர் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

முல்லைத்தீவு மருத்துவமனைக்குச் சொந்தமான வான் ஒன்று குண்டுவெடிப்பில் சிக்காது அதிர்ஷ்டவசமாகத் தப்பியிருக்கின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மணவாளன்பட்டமுறிப்பு என்னும் இடத்தில் நேற்றுக்காலை 7.15 மணியளவில் முதலாவது கிளைமோர் வெடித்துள்ளது. முல்லைத்தீவு மருத்துவமனைக்குச் சொந்தமான வான் ஒன்றை இலக்குவைத்தே இந்தக் கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டிருப்பதாக புலிகளின் காவல்துறையினர் கிளிநொச்சியில் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று சுமார் ஒருமணி நேரத்தின்பின்னர் நெடுங்கேணி பெரியகுளம் வீதியில் பயணிகள் வாகனம் ஒன்றை இலக்குவைத்து மற்றொரு கிளைமோர் வெடிக்கவைக்கப்பட்டிருப்பதாக கிளிநொச்சியில் இருந்து கிடைத்ததகவல்கள் தெரிவித்தன.

இந்த இரு குண்டுவெடிப்புகளும் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படைப்பிரிவினரால் நடத்தப்பட்டிருக்கின்றன என்று விடுதலைப்புலிகள்தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

## இளைஞர் மூவரின் சடலங்கள் வவுனியாவில் நேற்று மீட்பு!

### 'மிரட்டி கப்பம் வாங்குபவர்கள்' என்று எழுதப்பட்ட சுலோகத்துடன்

வவுனியா, பெப்.21

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் இளைஞர்கள் மூவரது சடலங்கள் நேற்றுக் காலைமீட்கப்பட்டிருக்கின்றன. இந்தமூன்று இளைஞர்களும் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

பண்டாரிக்குளம் அம்மன் ஆலயத்துக்கு அருகில் இவர்களது சடலங்கள் கிடப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலங்களை மீட்டு வவுனியா பொதுமருத்துவமனைச் சவச்சாலையில் ஒப்படைத்திருக்கின்றனர்.

கொல்லப்பட்ட மூவரும் யார் என்று உடனடியாக அடையாளங்காணப்படவில்லை. எனினும், பொதுமக்களைமிரட்டி கப்பம் அறவிடுவதில் இவர்கள் ஈடுபட்டு வந்தனர் எனத் தெரிவிக்கும் வாசகம் எழுதப்பட்ட அட்டை ஒன்று சடலங்களுக்கு அருகே கிடக்கக் காணப்பட்டது என்றும், கப்பம்கோரி பொதுமக்களை மிரட்டுவ

(04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் இடையே இரகசிய ஒப்பந்தமா?

### இதுகுறித்து சபையில் நேற்றுச் சர்ச்சை

கொழும்பு, பெப்.21

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இரகசிய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராச்சி தெரிவித்திருக்கிறார். இந்த ஒப்பந்தம் குறித்து அரசு, இச்சபைக்கு அறிவிக்க வேண்டுமென எதிர்க்கட்சியின் பிரதான கொரடா ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தலை

(04 ஆம் பக்கம் பார்க்க)

### பிரதமர் மறுப்பு

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் எதுவித இரகசிய ஒப்பந்தமும் இல்லையென பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பிரதம கொரடா ஜோசப் மைக்கல் பெரேராவின் விசேட அறிக்கைக்கு பதிலளித்து பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இல்லாத ஒப்பந்தம் குறித்து எதுவுமே கூறமுடியாது. இல்லாத ஒப்பந்தத்திலுள்ள விடயங்கள் குறித்தும் என்னால் எதுவும் கூற முடியாது - என்றார் பிரதமர். (ஐ)

## புலிகளைப்பேச்சுக்கு அழைத்துவர தீர்வுப்பொதி தயாராகின்றதாம்

### வெளிவிவகார அமைச்சர் இப்படித் தகவல்

இஸ்லாமாபாத், பெப். 21

தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும்சமாதானப்பேச்சுமேசைக்கு அழைத்துவரும் நோக்குடன் அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பொதி ஒன்றைத் தயார் செய்து வருகிறது.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்திருக்கிறார். பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்ட ரோஹித போகொல்லாகம அங்கு வைத்து 'ஹல்வ்' செய்தி நிறுவனத்துக்கு அளித்த செவ்வியில் இப்படிக் கூறியிருக்கின்றார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்



விமல்நாதசர்மா ( I.O , உள்ளூராட்சித் திணைக் களம், வவுனியா)- உமாமகேஸ்வரி (முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியை, வவுனியா) ஆகியோரின் அன்பு மகனும் எமதருமைப் பேரனுமாகிய

**செல்வன் அனந்தராம்**

(சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா)
2006ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் ஆறாவதாகச் சித்தியடைந்துள்ளார். இவரை மேலும் பல வெற்றிகள் பெற்றுச் சீரும் சிறப்புடன் வாழ சுழிபுரம் பாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

சுழிபுரம். (58357) ந.பத்மநாபசர்மா-விமலா

## மணிவிழாக் காணும் நாயகன் திருவாளர் வல்லிபுரம் கைலேஸ்வரன் (SLPS-I)

(அதிபர்-யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)



கல்விக்குக் கலங்கரையாம் - எம்
கல்லூரி முழுத்துணையாம்
பல்லாண்டு பணிசெய்தீர் - இன்று
பார்மகிழ விழாக்காண - எம்
மனம் நிறைய வாழ்த்துகிறோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி.
(சி/52074)

## வெளிவந்துவிட்டது சுந்தர்சண் வெளியீடு

புலமைப்பரிசில் வாராந்த மாதிரி வினாத்தாள்
*பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள் :-* மக்மிலன் புத்தகநிலையம், இல.3, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்., சிறிலங்கா புத்தகசாலை, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்., நஸ்ற் புத்தகப் பூங்கா, இல.105,கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்., பாக்யா புத்தகசாலை, கொக்குவில் சந்தி., ஹரேகிருஷ்ணா புத்தகசாலை, கோயில்வாசல், இணுவில்., கலாஜோதி புத்தகநிலையம், பிரதான வீதி, சங்கானை.
வினாத்தாள்கள் தேவையான கல்வி நிலையங்கள், பாடசாலைகள் தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம். 077 6016267
(சி/52070)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

| வையகம் | தெய்வீகம் |
|---|---|
| 31 | 24 |
| 07 | 02 |
| 1920 | 2004 |



**அமரர் செல்லப்பா குமாரசுவாமி**
( இளைப்பாறிய M.L.T )
திதி : சதுர்த்தி 21.02.2007

சோடிழந்த அன்றிலைப்போல் துயரமானேன்!
தோகைமயில் வாய் அகப்பட்ட சர்ப்பமானேன்!
காடுகளில் இனம்பிரிந்த கலைகளானேன்!
கருங்கடலில் காற்றடிக்குங் கப்பலானேன்!
ஓடுகின்ற பாய்மரத்தின் காகமானேன்!
உற்றார் ஒருவரில்லாப் பித்தனானேன்!
பாடுபட நானறியேன் பழனிவேலா!
பச்சைமயில் ஏறிவந்து இரட்சிப்பாயே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

பத்தாவத்தை,
இளவாலை (58217)

## கண்ணீர் அஞ்சலி

வைகுந்தனது பாதம் சேர்ந்தவற்கு அஞ்சலி
அமரர் திருவாசகமணி
**கந்தசாமி மாணிக்கவாசகர்**



அவர்களது பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது துயருறு அஞ்சலி ஏற்புடையதாக. சைவத்தையும் வைணவத்தையும் இரு கண்கள் என மதித்து திருவாசகத் தேனையும் ஆழ்வார்களது பாசுரங்களையும் முக்கியமாக நம்மாழ்வாரது ஆனந்த பாசுரங்களையும் சூழ்விசும்பு என்னும் தேனையும் சுவைத்து அருந்திய பெருந்தகை திருவாய் மொழி உபாசகராகிய இவரைச் சாரும்.

இவரது ஆன்மா என்றும் வைகுந்தனது திருப்பாதங்களைப் பற்றி நிற்பதாக. இவரது ஆன்மா சாந்தி பெறுவதாக.

ஆதீன மஹாசபை,
வண்ணை ஸ்ரீ வேங்கடேச
வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.

## தவறிவிட்டது

மீறாகினி இராசேந்திரம் என்பவருடைய விசேட அடையாள அட்டை 16.02.2007 அன்று பெருமாள் கோயிலடியில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தொ.பே.: 0776056483

## வேலையாள்கள் தேவை

இராமநாதன் வீதியில் உள்ள தனுஸ் உணவகத்திற்கு சமையல் வேலைக்கும் ரொட்டி போடவும் வேலையாள்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. தொடர்பு:- 57, இராமநாதன் வீதி, மிலேனியம் முன்பாக.

## விற்பனைக்கு

478 mother board, 80gb H.dd, flash drive, Ram என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ள வேண்டிய
தொ.பே.எண் 0777036084

## விற்பனைக்கு

தனிப்பாவனையிலுள்ள YAMAHA-LIBERO மோட்டார் சைக்கிளும் P-III கம்பியூட்டர், CD றைட்டர், UPS உடன் விற்பனைக்குண்டு.
உடன் அணுகவும்.
ம.இளங்கோ, இல. 4,சுச்சமோட்டை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4591502, 0773223213

## வாடகைக்கு

சுண்டிக்குளி, பழைய பூங்கா ஒழுங்கை, 29/2 இலக்கத்தில் அமைந்துள்ள வசதியான வீடு உடன் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு : ம.இளங்கோ,
இல.4, சுச்சமோட்டை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
021 4591502, 077 3223213

## The Jaffna Education Centre
## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(நாதன்ஸ் தியேட்டருக்கு அருகில் மேல் மாடியில் வலது பக்கம்)
Spoken English with Grammar
சிங்களம்
Shorthand Typing இருமொழிகள்
மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம் : 21.02.2007
இயக்குநர் இ.லோகநாயகி

## விற்பனைக்கு

1000 இற்கும் மேற்பட்ட தமிழ்ப்படப் பிரதிகள் (அனைத்தும் SKC Antifung 45) பதிவு செய்யப்பட்டவை, 1000 இற்கும் மேற்பட்ட பிரமிட், ஐங்கரன், கொலம்பியா தமிழ்ப்பட VCD க்கள் (அனைத்தும் 3CD கண்ணாடிக் கவருடன்) விற்பனைக்குண்டு.
தொடர்பு 021 222 4257

## தினசரி விமானசேவை

கொழும்பு -யாழ்.
யாழ். -கொழும்பு
DAYA AVIATION நிறுவனத்தினால் நான்கு பேர் பயணிக்கக்கூடிய இரு வழிப்பாதை தினசரி சிறுவிமான சேவை உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது.
ஒரு வழிப்பாதைக்கான கட்டணம்
ரூபா 30,000/=
உடனடிப்பயணத்துக்கு
தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 0114969116/ 0114542190
பக்ஸ்: 0114542360
மொபைல்: 0773846681

## C0MPUTER PARTS SALE

மதர்போட், VGA Card, காட்டிஸ்க், RAM சீடிறொம், டிவிடி றைற்றர், டிவிடி கொம்போ, பவர் சப்ளையர், மொடம், பிறிண்டர் போன்ற சகல கணனி உதிரிப்பாகங்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மேலும் Blank CDகள், Antivirus மென்பொருள் & Update புதிய MP3 பாடல்கள் போன்றவற்றையும் Dormain Registration, Web hosting web Designing, system Development சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

**SPEED IT NET**
72/28, பணிக்கர் லேன், திருநெல்வேலி
(மரக்காலை முன்பாக) T.P.: 021 4591871
web:www.speeditnet.com

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8356 0777 222422
Branch office No 167, Kasthuriyar Rd.- (Near Uthayan Publications) Jaffna

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software கணினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX

ஒரே நாளில் ஆரம்பம்:- 26/02/2007 09.00 AM

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட
பொருளியல் சிறப்புக்கலை 4ஆம் வருட
மாணவன்
**கிருஸ்ணர் கமலதாஸ்**
அவர்களது அகால மரணச்செய்திகேட்டு தாங்கொணா துயருறும் இவ்வேளையில், இவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது இதயம் கனிந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பொருளியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
(58361)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட
இறுதியாண்டு மாணவன்
**கி.கமலதாஸ்**
அவர்களது அகாலமரணத்தையிட்டு ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(58362)

## கண்ணீர் அஞ்சலி



ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரையின் யாழ்ப்பாணக் கிளையில் விற்பனை மேற்பார்வையாளராகக் கடமையாற்றும்
J.D. சஜீந்திரன் அவர்களின் பாசமிகு தந்தை
**அமரர் பிரான்சிஸ் லெனின் ஜெபநேசன்**
அவர்கள் 18.02.2007 அன்று காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

*தங்கள் துயரில் பங்குகொள்ளும்:*
கிளை முகாமையாளர், விற்பனை மேற்பார்வையாளர்கள்,
அலுவலக உத்தியோகத்தர்கள்.
(58299)

## 47 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

**திருமதி**
**ஆனந்தரூபா நிரஞ்ஜனி**

மலர்வு :- 06-03-1973
உதிர்வு :- 10-01-2007

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், மற்றும் சகல வழிகளிலும் உதவியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், 25.02.2007 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அழைக்கிறோம்.

தயவு செய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

47, கடவைப்புலம்,
சுன்னாகம்.
தொ.பே : 077 6220115 (57913) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**கந்தையா நல்லதம்பி (B.Com)**
லிபேட்டி சினிமா உரிமையாளர்
(முன்னாள் ஆசிரியர் சென்.பற்றிக்ஸ்)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நல்லதம்பி நேற்று(20.02.2007)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தன் கந்தையா (பிரபல வர்த்தகர்) - சின்னத்தங்கம் தம்பதியரின் அருமைப் புதல்வரும் பேபிநாயகியின் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை, சென்.தெரேசா மகளிர் கல்லூரி) கணவரும் திருமதி விநாயகமூர்த்தி தவபாக்கியத்தின் (கனடா), அன்புச் சகோதரனும் ஸ்ரீபாஸ்கரன்(ஜேர்மனி), ஸ்ரீரஜனி(நூலகர், பொது நூலகம், அளவெட்டி), ஸ்ரீ சாந்தினி (யாழ்.மத்திய கல்லூரிஆசிரியை), ஸ்ரீஜெயந்தினி(கனடா), ஸ்ரீநிஜாகரன்(கனடா), ஸ்ரீசுபாகரன்(கனடா), ஸ்ரீதர்சினி(ஹொலண்ட்), நிஜாமினி(சுவிஸ்), ரொபினி(B.A., எழுதுவினைஞர், சுன்னாகம்), பாமினி(B.A.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரெசி (ஜேர்மனி), அமரசிங்கம்(B.Com., ஆசிரியர், மல்லாகம்),மனோகரதாஸ் (யாழ்.பல்கலைக்கழகம்), ஜெயச்சந்திர காந்தன்(கனடா), குணரட்ணம்(ஹொலண்ட்), ஸ்ரீஸ்காந்தராஜ்(சுவிஸ்), கருணாகரன் (பிரதேச சபை, ஊர்காவற்றுறை), S.வளர்மதி(கனடா), ஜெயந்தி (கனடா), தனராஜன் (லிபேட்டி முகாமையாளர், கணித ஆசிரியர், குளோபல் அச்சுவேலி), ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.02.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு வல்லை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (58368)
தகவல்:
மனைவி (பேபி நாயகி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

## எகிறும் தென்னிலங்கையும் குமுறும் தமிழர் தாயகமும்

தெற்கின் பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்குடைய இனவாதிகள் மட்டுமல்லாமல் அவர்களுடன் கைகோர்த்து நிற்கும் ஆட்சியாளர்களும் - அதிகாரத்தில் இருப்போரும் - கூட, இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்தத்துக்கு வழி செய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முற்றாக எதிர்க்கின்றார்கள். அதைக் கிழித்தெறிய வேண்டும் என்ற இனவாதிகளின் கூச்சலுக்கு தலைசாய்க்கின்றார்கள். ஆனால் அப்படிக்கிழித்தெறியும் அதிகாரமும் முழு விருப்பமும் இருந்தும்கூட அதைச் செய்யாமலும், செய்ய முடியாமலும் அவர்கள் விழிபிதுங்கி நிற்கும் விநோதத்தை - விபரீதத்தை - இப்பத்தியில் நேற்றுப் பார்த்தோம். அதற்கு சில காரணங்கள் உண்டு. அவற்றுள் ஒன்றைப் பார்ப்போம்.

ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ, மூன்று மாதத்துக்குள் விடுதலைப்புலிகளுடன் முதற்சுற்று சமரசப்பேச்சுக்களை நடத்தினார். மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் குறைந்தபட்சம் மாற்றியாவது தீருவோம் என்று சூளுரைத்துக்கொண்டு 'ஜெனிவா - I' பேச்சுக்குச் சென்ற அவரது அரச பிரதிநிதிகள் அணி, அங்குபோய் அந்த ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவோம் என எழுத்தில் கையெழுத்திட்டு ஒப்புக்கொண்டு வரவேண்டியதாயிற்று. விரும்பாத ஒரு வேலையை வேறுவழியின்றிச் செய்துவிட்டு நாடு திரும்பிய அரச பிரதிநிதிகள் குழு, தங்கள் செயற்பாட்டை மூடி மறைப்பதற்காக ஒப்பந்தத்தை 'ஜெனிவா - I' பேச்சின்போது மாற்றியமைக்க இணக்கம் கண்டுள்ளோம் என்று 'கோயபலஸ்' பாணியில் பொய்ப்பிரசாரம் செய்யவேண்டியுமாயிற்று.

இவ்வாறு இந்த ஒப்பந்தத்தை எதிர்த்துக்கொண்டு - எதிர்ப்பவர்களாகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டு - அதே நேரம் ஒப்பந்தத்தைக் கைவிடாமல் கடைப்பிடிப்பவர்களாகவும் தம்மைக் காட்டியும் கூறியும் கொள்ள வேண்டிய தேவை - இக்கட்டு - அரசுத்தரப்புக்கு. அதற்கான காரணங்கள் பல.

முதலாவது - பிரதான - காரணம், இந்தப் போர் நிறுத்தத்தின் ஆக்கபூர்வமான பலாபலன்களை தென்னிலங்கைச் சிங்களமே முழுமையாக அனுபவித்து வருகிறது. யுத்தநிறுத்தத்தின் பெறுபேறு தமிழர் தாயகத்துக்கு எந்தப் பயனையும் அளிக்கவேயில்லை. ஆகவே, தமிழர்களுக்குக் கிடைக்காமல் தமக்கு மட்டும் கிடைக்கும் அந்தப் பலாபலன்களை இழக்க - அல்லது துண்டித்துக் கொள்ள - தென்னிலங்கை விரும்பவில்லை; தயாரில்லை.

2002 முற்பகுதியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாக முன்னர் யுத்தத்தினால் தென்னிலங்கை மோசமான பாதிப்பில் வீழ்ந்து கிடந்தது. கட்டுநாயக்கா படைத்தளம் மீதான பெரும் அழிவுத் தாக்குதலை அடுத்து நாட்டின் பொருளாதாரம் படுத்துவிட்டது. யுத்தம் வீட்டு வாசலைத் தட்டுவதை எதிர்பார்க்காத தென்னிலங்கை வாசிகள் கலங்கிப் போயினர்.

அந்த வேளையில்தான் யுத்தத்துக்குத் தற்காலிகமாகவேனும் ஓய்வு கொடுக்கும்- போர் நிறுத்தத்துக்கு வழி செய்யும் - புரிந்துணர்வு ஒப்பந்தம் தென்னிலங்கைக்கு ஆபத்பாந்தவனாக வந்து சேர்ந்தது. சிங்கள தேசத்தில் அதனால் ஆரம்பத்தில் முழு அமைதி நிலை ஏற்பட்டது. பொருளாதாரம் மேம்பட்டது. அழிவுகள் நிறுத்தப்பட்டன.

ஆனால், தமிழர் தேசத்தைப் பொறுத்தவரை ஒப்பந்தம் கைச்சாத்தாகிய ஆரம்ப காலத்தில் யுத்தத்தின் சத்தம் ஓய்ந்ததே தவிர ஆக்கபூர்வமாக எதுவுமே நடக்கவில்லை. முழுமையான சுமுகநிலைஉருவாகவில்லை. இயல்பு நிலை திரும்பவில்லை. இராணுவ ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல் தீவிரமடைந்ததே தவிர குறையவே இல்லை. அழிவுகளும், மனிதப் பேரவலங்களும் விண்ணை முட்ட எழுந்தன. மென்மேலும் தமிழர் தாயகம் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக, தாயக மண்ணிலிருந்து விரட்டப்பட்ட தமிழரின் எண்ணிக்கை மேலும் பல லட்சங்களால் உயர்ந்தது. போர்நிறுத்த காலத்தில் வீடு, வாசல்களை இழந்து, அன்றாட ஜீவனோபாயத்தைத் துறந்து, உறவுகளையும் உடைமைகளையும் பறிகொடுத்து, அவல வாழ்வோடு அந்தரிக்கும் தமிழரின் துயரம் பெருங்குமுறலாய்த் தொடர்கிறது. திறந்த வெளிச் சிறைவாழ்வும், பொருளாதாரத் தடையும், யுத்தச் சீரழிவும் தமிழர் தாயகத்தின் மீது முழு அளவில் திணிக்கப்பட 'கோமாளித்தனமான யுத்த நிறுத்தம்' தொடர்கிறது.

அதேசமயம் சமாதானத்தின் திரைக்குப்பின்னால் ஒரு நிழல் யுத்தத்தை - அதன் நிஜவடிவத்தை உலகுக்கு மூடி மறைத்துக்கொண்டு - தமிழர் தாயகத்தில் அரசுத்தரப்பினால் தடையேதுமின்றி மேற்கொள்ளவும் இந்த யுத்தநிறுத்தம் உதவுகின்றது.

ஆக, சமாதானத்தின் பலாபலன் தமிழ் மக்களைச் சென்றடையவில்லை. தாங்கமுடியாத அளவிற்கு அன்றாட வாழ்க்கைச்சுமையும், வாழ்வாதார வறுமையும் அவர்களை நசுக்கி வருகின்றன.

தமிழர்களுக்குத் தொடர் துயரத்தையும், தங்களுக்கு சாதக பலாபலன்களையும், அதேநேரம் தமிழர் தாயகத்துக்கு எதிராகக் கெடுபிடி நடவடிக்கைகளை முழு அளவில் முன்னெடுத்து தமிழர் தாயகத்தின் கழுத்தை இராணுவ நடவடிக்கைகள் மூலம் திருகுவதற்கு வாய்ப்பான சூழலையும் தந்துநிற்கும் யுத்த நிறுத்தத்தை அவ்வளவு சுலபமாகத் தூக்கி எறிந்து விடத் தென்னிலங்கை தயாராக இல்லை.

யுத்தப் பேரவலத்துக்குள் மூழ்கி, தமிழர் தாயகம் ஒருபுறம் குமுறிக்கொண்டிருக்க -

சமாதானத்தின் - யுத்தநிறுத்தத்தின் - முழுப் பலனையும் தான் மட்டுமே நன்கு அனுபவித்து, பெற்றுக்கொண்டு, அதன்மூலம் தனது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி, மேம்படுத்தி, அதன் வாயிலாகத் தனது இராணுவப் பலத்தையும் பெருக்கி விருத்தி செய்துகொண்டு, இப்போது எந்தக் கணத்தில் யுத்தநிறுத்தத்தை முறித்து, முழு அளவிலான யுத்தத்தைத் தமிழர் தாயகம் மீது கட்டவிழ்த்து விடலாம் என்ற சிந்தனையோடு மறுபுறத்தே எகிறிக்கொண்டு நிற்கின்றது தென்னிலங்கை.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முறிக்க விரும்பியும் அதை இதுவரை செய்யாமல் தென்னிலங்கைத் தலைமை காலத்தை இழுத்தடித்து வந்தமைக்கு மேலும் சில காரணங்கள் உண்டு. அந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு ஐந்து ஆண்டுகள் பூர்த்தி அடைந்த நிலையில் அவற்றை நாளை இப்பத்தியில் பார்ப்போம்.

# அச்சிடும்தாள் எடுத்துவர அனுமதி மறுப்பு; பத்திரிகைகள் நிறுத்தப்படும் அபாய நிலை

## அரச சார்பற்ற நிறுவன இணையம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,பெப்.21

குடாநாட்டில் வெளிவரும் பத்திரிகைகளுக்கான அச்சுத்தாள்கள் எடுத்துவர பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காததால், அவற்றை நிறுத்தவேண்டிய அபாயநிலை ஏற்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

இணையம் விடுத்துள்ள ஜனவரிமாத அறிக்கையில் இந்த விடயம் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளின் முகாமைத்துவங்கள் தற்போது பெரிய பிரச்சினை ஒன்றை எதிர்நோக்கியுள்ளன. பத்திரிகை அச்சிடுவதற்கான அச்சிடும் தாள்களைப் பத்திரிகை நிர்வாகங்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இதன் காரணமாக பத்திரிகைகள் எந்த வேளையிலும் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அச்சிடும் தாள்களை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. முன்னர் 12,16,18 பக்கங்களில் வெளிவந்த பத்திரிகைகள் தற்போது நான்கு பக்கங்களில், மிகக்குறைந்த பிரதிகளிலேயே அச்சிடப்படுகின்றன. அத்துடன் கடந்த வருடம் ஓகஸ்ட் 11ஆம் திகதிக்குப் பின்னர் கொழும்பில் வெளியாகும் பத்திரிகைகள் எதுவும் யாழ்ப்பாணத்துக்குக் கிடைப்பதில்லை.

இதன் காரணமாக குடாநாட்டு வாசகர்கள் நாளாந்தச் செய்திகளை அறிய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குடாநாட்டு மக்களின் நிலைமைகளில் பெரிதாக முன்னேற்றம் ஏதும் இல்லை. நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசர காலச் சட்டம் இராணுவத்தினரின் நடவடிக்கைகளுக்குச் சாதகமாக அமைந்துள்ளது.

**அதிக விலையில் உணவுப் பொருள்கள்**

அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகியன மக்களுக்கு வழங்கப்பட்டாலும் தட்டுப்பாடு உள்ளது. ஏனைய பொருள்கள் கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது. வசதி குறைந்தவர்கள் இவற்றைப் பெற முடியாத நிலை தோன்றியுள்ளது.

ப.நோ.கூ. சங்கங்களால் நடத்தப்படும் அத்தியாவசியப் பொருள் விநியோகத்தில் சமநிலை காணப்படவில்லை. எனவே எல்லா இடங்களிலும் வேறுபாடு இல்லாமல் பொருள்களை விநியோகம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

குடாநாட்டு மக்களின் வெளிமாவட்டப் போக்குவரத்து மார்க்கங்களாக இப்போதைக்கு விமான மற்றும் கப்பல் கட்டணங்கள் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளன. 1,500 ரூபாவாக இருந்த ஒரு வழிக் கப்பல் கட்டணம் 2 ஆயிரத்து 587 ரூபா 50 சதமாகவும், 12 ஆயிரம் ரூபாவாக இருந்த இரு வழி விமானப் பயணக் கட்டணம் 19 ஆயிரத்து 400 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது கஷ்டப்படும் குடாநாட்டு மக்கள் மீது மேலும் பளு சுமத்தப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-8)

கடத்தல், கைதுகள் தொடர்பான

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் யாழ். விஜயம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.21

குடாநாட்டில் காணாமற்போதல், கைதுகள், ஆள்கடத்தல்கள் ஆகியன தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக இன்று யாழ்ப்பாணம் வரவிருந்த ஜனாதிபதி ஆணைக்குழுவினர் தமது விஜயத்தை ஒத்திவைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைத்த ஐம்பதுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக நேரில் விசாரணைகளை நடத்துவதற்காக ஆணைக்குழுவின் எட்டு உறுப்பினர்கள் இன்று யாழ்ப்பாணம் வரவிருந்தனர்.

யாழ். நூலகத்தில் வைத்து இந்த விசாரணைகளை நடத்தவும் ஏற்பாடாகியிருந்தது.

தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தங்கள் விஜயத்தைப் பிற்போட்டிருப்பதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

ஆணைக்குழு விசாரணைக்கு இன்று சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டவர்கள் வருகைதர வேண்டியதில்லை என்றும் விசாரணை நடைபெறும் புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் யாழ். பொலிஸார் தெரி வித்தனர். (அ-1)

# வீதிகளின் இருமருங்கிலும் உள்ள மரக்கிளைகளை வெட்டப் பணிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.21

குடாநாட்டில் உள்ள முக்கிய வீதிகளின் இரு மருங்கிலும் உள்ள வேலிகள், வேலி மறைப்புகள், மரங்கள், விளம்பரப் பலகைகள் அனைத்தும் இராணுவத்தினரின் பணிப்பின் பேரில் அகற்றப்பட்டு வருகின்றன.

இராணுவ வாகனத் தொடரணிகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டுவரும் கிளைமோர் தாக்குதல்களை அடுத்தே பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில் கே.கே.எஸ். வீதி, பலாலி வீதி, ஏ-9 கண்டி வீதி ஆகிய மிக முக்கிய வீதிகளிலேயே இந்த நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீதிகளின் இரு மருங்கிலும் உள்ள வேலிகளை வெட்டி அகற்றுமாறு வீடுகளில் உள்ளோருக்குப் பணிக்கும் இராணுவத்தினர் தகரங்கள் மற்றும் கிடுகுகள் ஆகியவற்றால் அடைக்கப்பட்டுள்ள வேலிகளையும் உடனடியாக அகற்றுமாறு பணித்துள்ளனர்.

வீதிகளின் கரையோரங்களில் உள்ள பயன்தருமரங்கள் மற்றும் வியாபார நிலையங்களின் முன்னால் உள்ள விளம்பரப் பலகைகள் அனைத்தும் இந்த நடவடிக்கை காரணமாக அகற்றப்பட்டுள்ளன.

நேற்று முக்கிய வீதிகளின் இரு மருங்கிலும் உள்ள வேலிகள் உட்பட மறைப்புகள் அனைத்தும் முற்றாக அகற்றப்பட்டன. இவற்றை அகற்றுவதில் வீடுகளில் உள்ள மக்களும், வீதிகளால் பயணம் செய்தோரும் ஈடுபட்டிருந்ததைக்காணக் கூடியதாக இருந்தது.

வீதிகளில் நிறுவப்பட்டிருந்த பஸ் தரிப்பிடங்களும் நேற்று இராணுவத்தினரால் அகற்றப்பட்டன. அதனால் இப்போது வீதி ஓரங்கள் வெட்ட வெளியாகக்காட்சியளித்தன.

இதேவேளை -

பலாலி வீதி ஊடாக மக்கள் போக்குவரத்தும் அடிக்கடி நிறுத்தப்படுகிறது. இதனால் தமது அன்றாட அலுவல்கள் நிமித்தம் பலாலி வீதியைக் கடந்து செல்லவேண்டிய மக்கள் அதற்காக பல தருணங்களில் ஒரு மணித்தியாலத்திற்கும் கூடுதலாகக் காத்திருக்க நேர்கிறது.

வாகனத் தொடரணியின் வருகைக்காகவே பலாலி வீதியூடான மக்கள் போக்குவரத்து தடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-8-111-4-86-88-79)

## ஊரடங்கை மீறியவர்கள் ஆள்பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.21

ஊரடங்கை மீறியவர்கள் பொலீஸாரால் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களில் பலரும் 20 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

**மல்லாகத்தில் 100 பேர்**

மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்கப்பகுதியில் ஊரடங்கை மீறியவர்கள் எனக் கைதானவர்களில் நூறுபேர்களை பிணையில் செல்ல நீதிமன்றம் நேற்று அனுமதித்தது.

மானிப்பாய், இளவாலை, தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகளால் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நூறுபேர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்களை 20 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதித்த மல்லாகம் நீதிவான் அடுத்த தவணையில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை -

நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்ட 20 பேரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களையும் பிணையில் செல்ல நீதிவான் அனுமதி வழங்கினார்.

**பருத்தித்துறையில் ஏழுபேர் பிணையில்**

நெல்லியடியில் ஊரடங்கை மீறியதாகக் கைதுசெய்யப்பட்ட ஏழுபேரையும் இரண்டாயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார்.

மேற்படி நபர்களுக்கு 2ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக நேற்றைய உதயனில் வந்த செய்தி தவறு என்றும் -

அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்பதே சரியானதாகும் என்றும் நீதிமன்றப் பதிவாளர் நேற்று அறிவித்தார். (அ-1)

**நாளை**

மாசி- 10
வியாழக்கிழமை
22.02.2007
திதி: பஞ்சமி
முற்பகல் : 11.47
நட்சத்திரம் : அச்சுவினி
முன்னிரவு : 06.36
சுபநேரம் : 08.01 - 09.31
ராகுகாலம் : 02.01 - 03.31

## களபாவோடை ஆலயத்தில் ஆயுததாரிகள் கொள்ளை

யாழ்ப்பாணம்,பெப்.21

ஏழாலை களபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்மன் ஆலயத்தில் காவலாளிகளைக் கட்டி வைத்துவிட்டு, ஆயுததாரிகளால் பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இரவு கத்திகள், வாள்கள், பொல்லுகளுடன் ஆலயத்திற்குச் சென்ற பத்துக்கும் மேற்பட்டோர் இக்கொள்ளையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆலயத்தில் இருந்த நகைகள், அலங்கரிப்பு அங்கிகள், கற்பூரம், தேங்காய் என பல பொருள்களும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டுவதற்கு முன்னர், ஆலயத்தில் உள்ள சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த ஆண்பிள்ளைகளை அறையில் பூட்டி வைத்தனர்.

இக்கொள்ளைச் சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (அ-68)

**குடாநாட்டின் கூட்டிச் செய்திகள்** யாழ்ப்பாணம்

### பொலிஸ் நிலையத்தில் இன்று பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ். பொலிஸ் நிலையத்தில் இன்று காலை 9 மணிமுதல் நத்தரிசி, சவர்க்காரம் போன்ற பொருள்கள் விற்பனை செய்யப்படவிருக்கின்றன. யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (1)

### உலக உணவு நிறுவனம் 1 லட்சம் பேருக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம்,பெப்.21

குடாநாட்டில் பாதிக்கப்பட்டுள்ள மக்களில் ஒரு லட்சத்து 20 ஆயிரம்பேருக்கு உலர் உணவுநிவாரணம் வழங்குவதற்கு உலக உணவுத் திட்ட நிறுவனம் முன்வந்துள்ளதாக அறியவருகின்றது.

இது தொடர்பான விவரங்களை அந்த நிறுவனம் யாழ்.செயலகத்துடன் தொடர்பு கொண்டு கோரியுள்ளதாகவும், இதற்கான நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இந்த விவரங்கள் திரட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-8)

### உதவி அஞ்சல் அதிபர் போட்டிப் பரீட்சை

நல்லூர்,பெப்.21

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள உதவி அஞ்சல் அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டைகள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

அவற்றை உரியவர்களுக்கு விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று வடபிராந்திய பிரதித் தபால் மா அதிபர் எம்.குமரகுரு தெரிவித்துள்ளார். (1-203-111)

### ஊர்காவற்றுறையில் இலங்கை வங்கிக் கருமபீடம்

யாழ்ப்பாணம்,பெப்.21

வேலணையில் இயங்கும் இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக் கிளையின் புதிய கருமபீடத் திறப்புவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் கலந்துகொள்வார். (1-202)

### ஏழாலைக் கிளையில் திருட்டு

யாழ்ப்பாணம்,பெப்.21

சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்தின் ஏழாலை மத்திய கிளை இரண்டாவது தடவையாக கடந்த வெள்ளியிரவு உடைத்து அங்கிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

சிவராத்திரியன்று ஊரடங்கு நீக்கப்பட்டவேளை இத்திருட்டு இடம்பெற்றுள்ளது. இது குறித்து சுன்னாகம் பொலி ஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (1-68)

### கற்பித்தல் செயலமர்வு

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கற்றல், கற்பித்தல் செயலமர்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. (1-202)

### இன்று விபூதிப் புதன்

குருநகர்,பெப்.21

கிறிஸ்தவர்கள் வருடந்தோறும் அனுஷ்டிக்கும் தவக்காலத்தின் தொடக்க நாளான விபூதிப் புதன் இன்றாகும்.

இதனையொட்டி கத்தோலிக்க தேவாலயங்களில் இன்று காலையில் விசேட திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளன. (202-51)

### தலைமைத்துவப் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.21

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மன்றக் காரியாலயத்தில் தலைமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பான பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது. (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மக்களை மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளனர்.

**உணவுப் பொருள்கள் கிடைப்பதாகப் பொய்ப்பிரசாரம்**

குடாநாட்டில் பாரிய உணவுப்பஞ்சம் நிலவுகின்றபோதும் அங்கு உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைப்பதாக அரசு பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றது.

யாழ். குடாநாட்டில் மக்கள் சிறைக் கைதிகள் போன்று நடத்தப்படுகின்றனர். அதேபோன்று பிற மாவட்டங்களில் தங்கியுள்ளவர்கள் தமது எந்தவொரு அவசிய தேவைக்கும் தாம் விரும்புகின்ற நேரத்தில் யாழ்ப்பாணம் செல்ல முடியாத அவல வாழ்வை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

மக்களின் அடிப்படை மனித உரிமைகளை முழுமையாக மீறும் வகையில் அரசினால் மூடப்பட்டுள்ள ஏ-9 வீதியை உடனடியாகத் திறக்கவேண்டுமென தமிழர்தரப்பு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற போதிலும் இன்றுவரை அரசு அதற்கு செவிசாய்க்கவில்லை. அதேபோன்று, நாம் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை நேரடியாகச் சந்தித்து மூடப்பட்ட வீதியைத் திறப்பதற்கு வேண்டிய அழுத்தங்களை அரசுக்குக் கொடுத்துப் பாதையைத் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்துள்ள போதிலும் இற்றைவரை அவர்கள் அதற்கான எந்தவொரு நடவடிக்கையினையும் எடுக்கவில்லை என்பது மிகுந்த ஏமாற்றத்தினை அளிக்கின்றது.

**குடாநாட்டு மக்கள் மனித கேடயங்கள்**

சர்வதேச சமூகத்தின் பாராமுகமான இந்த நடவடிக்கையினால் இலங்கை அரசு இன்று யாழ். குடாநாட்டு மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி தனது ஆயுத தளபாடங்களையும், இராணுவத்தினரையும் யாழில் இருந்து திருகோணமலைக்கும், திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் நகர்த்தி வருகின்றது.

கடந்தவாரம் யாழில் இருந்து கப்பல் மூலம் தென்பகுதியை வந்தடைந்த பொதுமக்கள் எம்மிடம் நேரடியாகக் கூறிய தகவல்களின்படி, தாம் பயணம் செய்த கப்பலில் பெருமளவு இராணுவத்தினரும் பயணம் செய்ததாகவும் தாம் தமது உயிரைக் கையில் பிடித்தபடியே வந்து சேர்ந்ததாகவும் கூறினார்கள்.

**சர்வதேசம் பாராமுகம்**

ஸ்ரீலங்காப் படைகளினதும் அரசினதும் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன், எதிர்காலத்தில் இவ்வாறு ஆயுத தளபாடங்களையும், இராணுவத்தினரையும் ஏற்றிச்செல்லும் கப்பல்களில் பொதுமக்களை கேடயங்களாகப் பயன்படுத்தி ஏற்றிச்செல்வதை உடனடியாக நிறுத்தவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்விடயத்தில் சர்வதேசசமூகம் பாராமுகமாக இருக்காமல் இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற இச் செயற்பாட்டினைத் தடுத்து நிறுத்தவும் போர் நிறுத்த உடன்படிக்கையினை மீறும் வகையில் மூடிவைக்கப்பட்டுள்ள ஏ - 09 வீதியைத் திறப்பதன் மூலம் அங்கு நிலவும் பாரிய மனிதாபிமானப் பிரச்சினையைத் தீர்க்கவும் அரசின்மீது அழுத்தம் கொடுக்கவேண்டு மெனவும் அவசரமாகக் கோருகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


**SriLanka Red Cross Society**

**Jaffna Branch**

We want **Part Time** Doctors to work at our mobile Medical clinic. Please send the CV to reach us before 28th February 2007

Branch Executive Officer,
SLRCS, 73, Kandy Rd. Jaffna.

(C-53076)



**PATRICIAN INSTITUTES**

**பற்றிஷன் தொழில்பயிற்சி நிலையம்**

**VACANCY**

1) Arc Welding Instructor
2) Lathe Instructor
3) Plumbing Instructor

மேற்படி பதவிகளுக்கு தகைமையானவர்கள் உடன் 26.02.2007 இற்கு முன்விண்ணப்பிக்கவும்.

குறிப்பு: எமது நிறுவனத்தில் இலவச பயிற்சி நெறிகள் ஆரம்பமாக உள்ளதால் 14 - 18 வயதுக்கு உட்பட்ட மாணவ, மாணவிகள் உடன் பதிவு செய்யவும். மேலதிக விவரங்களுக்கு

59, St.Patrick's Road,
Jaffna. T.P.: 222 6148 (C-52074) **பதிவாளர்.**


## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

வளாகத்தின் முகப்பில் கறுப்புக் கொடிகளும், அஞ்சலி செலுத்தும் பதாகைகளும் நேற்றுக் காணப்பட்டன.

இதேவேளை - பல்கலை. மாணவனின் கொலைக்கு கவலை தெரிவித்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில்-

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 4ஆம் வருட மாணவன் கி.கமலதாஸ் சுட்டுக் கொல்லப்பட்டமை மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமாகும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களது கல்விச் செயற்பாட்டை ஆரம்பிக்க இருந்தவேளை இத்தகைய சம்பவங்கள் மாணவர் மத்தியில் பீதியையும் மனவருத்தத்தையும் ஏற்படுத்தக் கூடியவையாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## புலிகளைப் பேச்சுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"அரசு தயாரித்து வரும் தீர்வுப்பொதி மூலம் தமிழ் மக்கள் சமாதானத்தின் பங்காளிகள் ஆவார்கள். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அரசு யுத்தத்தை மேற்கொள்வதாக சர்வதேச சமூகம் சுமத்தும் குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதச் செயற்பாட்டில் ஈடுபடும்போது எவ்வாறு அமைதியான சூழலைப் பேணமுடியும்? சமாதானத்தை உருவாக்க இலங்கை மக்களிடமிருந்தும் சர்வதேச சமூகத்திடமிருந்தும் பெரும் ஒத்துழைப்புக் கிடைத்து வருகின்றது. இந்த நிலையில் அரசு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் உள்ளது. அதேவேளை, விடுதலைப் புலிகளோ இந்த விடயத்தில் அர்ப்பணிப் புடன் இல்லை.

- இவ்வாறு ரோகித போகொல்லாகம அந்த செவ்வியில் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## யாழ். இந்து,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெறுவதற்கான வெட்டுப்புள்ளி விவரங்கள் நேற்று வெளியாகியிருந்தன.

அந்த வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் தமது பாடசாலைகளில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு மொத்தம் 97 பேர் அனுமதி பெற்றதாக யாழ். இந்துக்கல்லூரி அதிபரும், 86 பேர் அனுமதி பெற்ற வேம்படி மகளிர் கல்லூரி அதிபரும் தெரிவித்தனர். (அ-1)

## இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு மூவரும் பயன்படுத்திவந்தனர் எனக் கூறப்படும் கையடக்கத் தொலைபேசி இலக்கம் ஒன்றும் அதில் எழுதப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களை மிரட்டி கப்பம் பெறுவோருக்குஎதிர் காலத்திலும் இதேபோன்று தண்டனை வழங்கப்படும் என்று எச்சரிக்கும் வாசகங்களும் அந்த அட்டையில் எழுதப்பட்டிருந்தனஎன்றுகூறப்படுகின்றது.

இந்த முக்கொலை தொடர்பாக தாங்கள் விசாரணை நடத்தி வருகின்றனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-312)

## அரசு - புலிகள் இடையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையில் கூடியது. வாய்மூல விடைகளுக்கான கேள்வி நேரத்தின்பின்னர் எதிர்க் கட்சி பிரதம கொரடா ஜோசப் மைக்கல் பெரேரா விசேட அறிக்கையொன்றை விடுத்துப் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

இந்நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக கடந்த காலங்களில் முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை வகித்த இரு முன்னாள் அமைச்சர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துகள் எமது கவனத்தை ஈர்த்துள்ளன. இது தொடர்பாக அரசுத் தரப்பிலிருந்து இதுவரை எதுவித பதிலும் தெரிவிக்கப்படவில்லை. இது எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இம் மாதம் 18 ஆம் திகதிய 'மவ்பிம' பத்திரிகைக்கு சிறிபதி சூரியாராச்சி கீழ்க் கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார். பயங்கரவாதிகளின் நிர்வாகம் மற்றும் பெருந்தொகையான ஆயுதங்கள் இருக்கும் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைத் தவிர்த்து கிழக்குப் பகுதியில் யுத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் உயர் அரசியல் வாதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தம் மற்றும் இது தொடர்பான ஒலிப்பதிவு நாடாக்களை விரைவில் வெளியிடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்று எமக்கு புலி லேபல்களை ஒட்டுகின்றனர். உண்மையிலேயே புலிகளுடன்ஒப்பந்தம் செய்துகொண்டது யார் என்பதை நாம் விரைவில் அறிவிப்போம். யுத்தம் புரியவேண்டியது கிளிநொச்சி முல்லைத்தீவு பகுதிகளில்தான். இருந்தும், பாலைவனங்களில் யுத்தத்தை மேற்கொண்டு புலிகள் வாபஸ் பெற்றுவிட்டனர் எனக்கூறுகின்றனர் என சிறிபதி ஆரியாராச்சி நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலும் தெரிவித்துள்ளார்.

இது எமக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராச்சி தெரிவித்துள்ளபடி உண்மையிலேயே அரசு, புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதா? அப்படி ஒரு ஒப்பந்தம் இருக்குமானால் அது தொடர்பாக இச் சபைக்கு அறிவிக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும்.

சிறிபதி சூரியாராச்சி வெளிச்சத்துக்கு கொண்டு வந்த இந்த ஒப்பந்தம் எப்போது கைச்சாத்திடப்பட்டது? எந்தத் தரப்பினால்? இந்த ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகள் என்ன? இல்லாவிட்டால் அதைத் தொடர்ந் தும் மறைத்து வைக்கப்போகின்றீர்களா?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார். (ஐ)

## ஓமந்தையில் குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச செய்தி ஊடகங்கள்சிலவற்றுக்குத் தகவல்வெளியிட்டிருக்கும் அரச இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க, விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம் என்று அடையாளம் காணப்பட்ட இலக்கு மீதும், அரசுப் படைகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப் புலிகள் பயன்படுத்தும் பீரங்கி நிலை ஒன்றின் மீதுமே குண்டு வீசப்பட்டது என்று தெரிவித்தார்.

இத்தாக்குதல் தொடர்பான விரிவான விவரங்கள் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை

ஓமந்தையில் சிவிலியன் கிராமம் ஒன்றின் மீதே இஸ்ரேலியத் தயாரிப்பு 'கிபிர்' விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கியிருக்கின்றன என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் கிளிநொச்சியில் இருந்து தொலைபேசி ஊடாக சர்வதேச செய்தி நிறுவனங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்களைத் தண்டிக்கின்ற அரசின் கொடுஞ்செயல் இது. இதுபோன்ற தாக்குதல்கள் எமக்குப் புதியவை அல்ல என்றும் அவர் கூறியிருக்கிறார். தாக்குதல் நடந்த கிராமத்திலிருந்து பொதுமக்கள் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மற்றொருவர் காயமடைந்துள்ளார் என்றும் புலிகளின் இராணுவப் பேச்சாளர் தகவல் வெளியிட்டார்.

வடக்கில் அரசுப்படைகள் மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புகளின் கட்டுப்பாட்டு எல்லைப் பிரதேசமாக அமைந்திருக்கும் ஓமந்தைப் பகுதியில் நடத்தப் பட்டிருக்கும் இந்த வான் வழித் தாக்குதல் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளுக்கு கிட்டிய தொலைவில் இருக்கும் கிராமங்களில் மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## அன்ரனி கிறிஸ்தோப்பர் (செபமாலைமுத்து)



**(ஓய்வுபெற்ற அரச ஊழியர், சாவகச்சேரி)**

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி கிறிஸ்தோப்பர் 20.02.2007 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (21.02.2007)புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கச்சாய் றோட், விகோரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தபாற்கந்தோர் வீதி,*
*பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி.* (58371)

தகவல்:
**அப்பன்(மகன்)**

## சுரேந்திரம் பரமேஸ்வரன் (சோதி)

**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், மீன்பிடிக் கூட்டுத்தாபனம்)**



நீர்கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுரேந்திரம் பரமேஸ்வரன் 20.02.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுரேந்திரம் - நித்தியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் சந்திரகுமாரியின் (ஆசிரியை, யா/கனகரத்தினம் ம.ம.வி.) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திரசேகரி - தயாநிதி தம்பதியரின் மருமகனும் சபேசன்(லண்டன்), தினேஸ், சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நீற்றாவின் (மஞ்சு) மாமனுமாவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் துண்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*31, சந்தனமாதா கோயில் வீதி,*
*சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.* (58300)

தகவல்:
**மனைவி.**

## நாகலிங்கம் இராசேந்திரம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசேந்திரம் நேற்று (20.02.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுதுமலையைச் சேர்ந்த சுந்தரம்-முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராணியின் பாசமிகு கணவரும் விஜிதா(லண்டன்), சசிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞான அருள்பாபாவின் (லண்டன்) அன்பு மாமனும் மனுஷா, அனுஷன், பபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.* (58376)

தகவல்:
**இ.இந்திராணி (மனைவி).**

## செல்லையா தங்கராசா

அல்லாரை தெற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தங்கராசா 20.02.2007 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4மணியளவில் காலமானார்.

அன்னார் நாகபூரணத்தின் அன்புக் கணவரும் ஜெயபாலினி (பிரான்ஸ்), ஜெயபூரணி (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), ஜெயக்குமார் (பிரான்ஸ்), ஜெயந்தினி (ஆசிரியர், யா/வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை), தவக்குமார் (மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கேதீஸ்வரன் (பிரான்ஸ்), ஜங்கரன் (பிரதேச செயலகம், சாவகச்சேரி), ஜனகன் (பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி) ஆகியோரின் மாமனாரும் மகனியா, தரன்யா, அபினவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று (21.02.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூத வுடல் கொப்புலவு இந்து மயானத்துக்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்லாரை தெற்கு,*
*மீசாலை.*

தகவல்:
**மனைவி.**

# மரண அறிவித்தல்கள்

## பிரான்சிஸ் லெனி ஜெகநேசன் (நேசன்)



**(யாழ்.மாநகரசபை வெளிக்கள மேற்பார்வையாளர்)**

யாழ்ப்பாணம், 4ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பிரான்சிஸ் லெனி ஜெகநேசன் (நேசன்) கொழும்பில் 18.02.2007 இல் காலமானார்.

அன்னார் மேரி மில்ட்றெட் சந்திரமலரின் அன்புக்கணவரும் டேமியன் சஜிந்திரனின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை பிரான்சிஸ்கோ - றோஸ் வினிபிறட் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு மரியாம்பிள்ளை - எலிசபேத் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பேபியன், குணசேகரம், காலஞ்சென்ற ஜெகசோதி மற்றும் ஜெகநாதன், ஜெகதீசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயமலர், காலஞ்சென்ற சந்திரன், இராசமலர், ஆகியோரின் மைத்துனரும் ரமணி, மணி, ரோகினி, ராணி, விஜயலட்சுமி மற்றும் காலஞ்சென்ற Dr.வின்ஸ்ரென், **B.M.**ஜோசப், சறோ ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 20.02.2007 செவ்வாய்க்கிழமை, 21.02.2007 புதன்கிழமை பொரளை **A.F.**றேமண்ட் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நல்லடக்கக் கிரியைகள் 21.02.2007 புதன்கிழமை மாலை 4 மணியளவில் பொரளை கனத்தை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*16, கோயில் வீதி ஒழுங்கை நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*
*292/1, திம்பிரிகஸ்யாய வீதி,*
*நாரஹேன்பிட்டிய, கொழும்பு - 5.*

தகவல்:
**டேமியன் சபிந்திரன் (மகன்)**
**தொ.பே.:0773039551**
**ஜெகதீசன் (சகோதரர்).**

## திருமதி நன்னித்தம்பி செல்லம்மா

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி செல்லம்மா 20.02.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் நன்னித்தம்பியின் அன்பு மனைவியும் பாக்கியம் சின்னத்தங்கச்சி, அன்னம்மா, நடராஜா, நடேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற கந்தையா காலஞ்சென்ற சின்னனாச்சி, மார்க்கண்டு, சின்னத்தம்பி ஆகியோரின் மூத்த சகோதரியும் காலஞ்சென்ற பசுபதி, காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்ற முருகேஸ், செல்லையா, இன்பராணி, காலஞ்சென்ற நடேசு ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2007) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

# 6ஆம் மாத நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 | 27 |
| 08 | 08 |
| 1960 | 2006 |



அமரர்

**அப்பாச்சிப்பிள்ளை அமிர்தலிங்கம்**

**( மல்லாகம் STR Communication)**

மணவாழ்க்கை பிறந்திருக்கும்
மகிழ்வான வேளைதனில்
பிணமாக உமைக் காண்போமென
கனவிலும் எண்ணவில்லை
வம்சத்தின் விருத்திக்காய்
வகையோடோ செல்வம் கண்டீர்
அம்சத்தில் சிறந்தவராய்
அவனியிலே ஆக்கிவிட்டீர்
நம்பிக்கை வைத்தவனாம்
நாயகன் விநாயகன் சீர்
உம் சித்திரத்துமகை
உவப்போடு ஏற்றானோ?

தகவல்: **மனைவி, மகள்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org